

சேலத்தில் சட்ட மேதை அம்பேத்கரின் பிறந்த தினத்தையொட்டி அவரின் திருவுருவ சிலைக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் இரா. இராஜேந்திரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.




கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி., பெரம்பலூர் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மருத்துவர் S.T. ஜெயலெட்சுமியை ஆதரித்து லாடபுரம்,குரும்பலூர், செட்டிக்குளம் ,பாடாலூர், வி.களத்தூர் ஆகிய இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு தீவிர பிரச்சாரம் செய்தார். மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத்,நூருல்ஹிதா இஸ்மாயில், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர் எம்.இராஜ்குமார், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# திருமயம் தொகுதியில் அமைச்சர் எஸ்.ரகுபதி தீவிர பிரச்சாரம்!

புதுக்கோட்டை, ஏப்.16-

திருமயம் தொகுதி தி.மு.க. வேட்பாளரான அமைச்சர் எஸ்.ரகுபதி தொகுதிக்கு உட்பட்ட அரசம்பட்டி, மெய்யப்பட்டி, அம்மன்பட்டி, ஒசுவான்பட்டி, மருங்கூர், முள்ளிப்பட்டி, சின்னக் கொல்லை. ஆனைப்பட்டி, குரும்பபட்டி, ஏனப்பட்டி, பாப்பாம்பட்டி உட்பட 21 கிராமங்களில் நேற்று ஓட்டு சேகரித்தார்.

அப்போது அவர் பேசுகையில், தமிழக அரசின் மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமைத்தொகை, பள்ளிகளில் காலை உணவுத்திட்டம், நான் முதல்வன் திட்டம் ஆகியவை மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன. இந்திய அளவில் பாராட்டப்பட்டு அங்கெல்லாம் இத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றனர். இந்த தேர்தலில் தி.மு.க.வை ஆதரிக்க வேண்டும் என்றார். இந்திய நாட்டிலேயே பொருளாதார வளர்ச்சியில் தமிழகம் தலைசிறந்த மாநிலமாக திகழ்கிறது. இதற்கு காரணம் முதல்வர் முக. ஸ்டாலின் அவர்கள் தான். அரசு திட்டங்களால் பயன் பெற்று வரும் நீங்கள் அதற்கு நன்றி பாராட்டும் வகையில் நீங்கள் மீண்டும் தி.மு.க.வுக்கு வாக்களித்தால் உங்கள் வாழ்க்கை வளம் பெற புதிய திட்டங்களை நமது முதல்வர் அறிவித்துள்ளார்.

தற்போது வழங்கப்படும் ரூ.1,000 உதவித்தொகை, ரூ.2,000 ஆக உயர்த்தப்படும். முதியோர் ஓய்வூதியம் முதியோர்களுக்கான ஓய்வூதியம் ரூ.1,200லிருந்து ரூ.2,000 ஆக உயர்த்தப்படும். பெண்கள் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பர்னிச்சர் பொருட்கள் வாங்க பெண்களுக்கு ரூ.8,000 மதிப்பிலான "இல்லத்தரசி பரிசு கூப்பன்கள்" வழங்கப்படும். மக்கள் நலன் கருதி சிறப்பான திட்டங்களை செயல்படுத் துபவர் நமது முதல்வர் என்று கூறியதுடன், திருமயம் தொகுதி மக்கள் முன்னேற உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களியுங்கள் என்றார்.

பிரசாரத்தில் காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ. ராம. சுப்புராம், வடக்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பாரி வள்ளல், வட்டார காங்கிரஸ் தலைவர் மணிகண்டன், கரக மாவட்ட அவைத்தலைவர் அ.சுப்பிரமணியன், திருமயம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஆறு. சிதம்பரம், மாரிமுத்து, மாணிக்கம் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் கழக அரசின்

# சாதனைகளை விளக்கி அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வாக்கு சேகரிப்பு!

புதுக்கோட்டை, ஏப்.16-

வருகின்ற சட்டமன்றத் தேர்தல் என்பது ஏதோ ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகின்ற தேர்தல் அல்ல. மிக மிக முக்கியமான தேர்தல். மேலோட்டமாக பார்க்காமல் ஆழ்ந்து பார்த்தால் இது தெரியும். எதிர் அணியினர் எப்படிப்பட்டவர்கள் என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கு எதிரான பாசிச மதவாத சக்திகள் அவர்கள்.

தமிழ்நாடு இன்றைக்கு வளர்ச்சி அடைந்த ஒரு மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது. அதை பாதுகாக்கின்ற தேர்தல் தான் இந்த தேர்தல். நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலேயே நூற்றுக்கு நூறு சதவீதம் நமது அணி வெற்றி பெற்றது தமிழ்நாட்டில் மட்டும் தான். அதற்கு காரணம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான். திராவிட மாடல் ஆட்சிக்கு நாம் நன்றி தெரிவிக்கின்ற தேர்தல்தான் இந்த தேர்தல். தேவாலயங்கள் புதுப்பிக்கப்படுவதற்காக உத்தரவிட்டவர் நமது முதல்வர் அவர்கள். அதாவது தேவாலயங்களை புதிதாக கட்டுவதற்கு அனுமதி கேட்டால் 30 நாட்களுக்குள் வழங்க வேண்டும். அப்படி இல்லை என்றால் அவர்களே கட்டுமான பணியை தொடங்கலாம் என உத்தரவிட்டவர் நமது முதல்வர் அவர்கள்.

சிறுபான்மை மக்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றது நமது ஆட்சியில் தான். சிறுபான்மை மக்கள் அனைவரும் சமம் என நடத்தப்படுவது தமிழ்நாட்டில் மட்டும் தான். சிறுபான்மை மக்களின் அரணாக அவர்களுக்கு சிறு பிரச்சனை வந்தாலும் எதிர்த்து நிற்கும் ஒரே தலைவர் நமது முதல்வர் அவர்கள் தான்.

அவர் மூன்று கலைஞர் அவர்கள், நான்கு அண்ணா அவர்கள், ஐந்து பெரியார் அவர்களுக்கு சமமானவர். ஒன்றியத்தின் அடக்குமுறை எதிர்த்து போராடி வெற்றி பெறுபவர். ஐந்து ஆண்டுகள் நடைபெற்ற ஆட்சிக்கு, முதல்வரின் உழைப்புக்கு நன்றி செலுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம். தலைவர் கலைஞர் அவர்கள் இலவச மின்சாரத்தை கொண்டு வந்து 35 ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். அதற்கு உதய் என்கிற திட்டத்தை அடிமை அ.தி.மு.க. உதவியோடு ஒன்றிய அரசு கொண்டுவந்து தடுக்க பார்க்கிறது. இதேபோல கடந்த காங்கிரஸ் ஆட்சியின் போது கல்வி கடன் வழங்கப்பட்டது. பா.ஜ.க. இதனை கார்ப்பரேட் நிறுவனங்களிடம் முதலாளிகளிடம் ஒப்படைத்து விட்டது. 18 ஆண்டுகளாக 100 நாள் வேலைத் திட்டத்தில் மக்கள் பயன் அடைந்து வந்தனர். அந்தத் திட்டத்தை தடுக்க, ரத்து செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கும் வரை அது நடக்காது.

இது மட்டுமல்ல தேர்தல் வாக்குறுதியாக விவசாயிகளுக்கு மீட்டர்கள் பொருத்தப்பட்ட மோட்டார் வழங்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கின்றார்கள். ஈரானிலே போர் நடக்கிறது. ஆனால் இங்கே சிலிண்டர் தட்டுப்பாடு, பெட்ரோல் டீசல் கிடைக்கவில்லை. விலை உயர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம். ஒன்றிய அரசின் மெத்தன போக்கால் மக்கள் தினம் தினம் அவதிப்பட்டு கொண்டிருக்கின்றார்கள். எனவே தமிழ்நாட்டை பாதுகாக்க, விலை மதிப்பில்லாத வாக்குகளை நீங்கள் உதயசூரியன் சின்னத்தில் அளித்திட வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் நலனை பாதுகாக்கும் வெற்றி சின்னம் உதயசூரியன் சின்னம். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்வில் திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பி.கே.டி. தங்கமணி, விசிக மாவட்ட தலைவர் வெள்ளை நெஞ்சன், ஆர்.வி.செல்வம், பெரி. பன்னீர்செல்வம், ராஜ பெரியண்ணன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தமிழ்நாடு

# கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு!

சென்னை, ஏப்.16-

நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு, தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு கேபிள் டிவி உரிமையாளர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளரும் தமிழ்நாடு கேபிள் டிவி ஆப்ரேட்டர்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவருமான தஞ்சை கோ.ஜீவா அவர்கள், 14.04.2026 காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்களை நேரில் சந்தித்து தி.மு.க. தலைமையிலான மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் பொதுத் தேர்தலில் முழு ஆதரவு அளிப்பதாகவும், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற அனைத்து தொகுதிகளிலும் தமிழ்நாடு கேபிள் டிவி உரிமை யாளர்கள் சங்க நிர்வாகிகள் களப்பணியாற்றி அவர்களின் வெற்றிக்கு பாடுபடுவார்கள் என உறுதி அளித்தார்.



குன்னூர் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் போட்டியிடும் கேஎம்.ராஜுதினமும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அனைத்து குக்கி ராமங்களுக்கும் நேரடியாக சென்று வாக்கு சேகரித்து வருகிறார். இந்நிலையில், நேற்று குன்னூர் பகுதியில் உள்ள வெலிங்டன் பஜார், போகி தெரு. ஜெயந்தி நகர், நல்லப்பன் தெரு, அண்ணா நகர், பாய்ஸ் கம்பெனி ஆகிய பகுதிகளில் வாக்கு சேகரித்தார்.

## பெரம்பலூர் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர் S T. ஜெயலட்சுமியை ஆதரித்து

# கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. வாக்கு சேகரிப்பு!

பெரம்பலூர், ஏப். 16-

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர் S T. ஜெயலட்சுமியை ஆதரித்து முன்னாள் மத்திய அமைச்சர் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா. எம்.பி., வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியத்தில் உள்ள பூலாம்பாடி, அரும்பாவூர், பெரம்பலூர் ஒன்றியத்தில் உள்ள எசனை, பெரம்பலூர் நகரம் உள்ளிட்ட இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்!.

அப்போது அவர் பேசுகையில்,. கொரோனா காலத்தில் பிரதமர் மோடி, அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிசாமியும் வெளியே வரவில்லை, ஆனால் முதல்வரான மு.க.ஸ்டாலின் மருத்துவ உடையணிந்து கொரோனா நோயாளிகளை சந்தித்து ஆறுதல் தெரிவித்து, கொரோனா கால நிதியுதவி வழங்கினார். வெளிநாட்டில் படிக்க தகுதி தேர்வெழுதி யுனிவர்சிட்டி செலக்ஷன் தேர்வானால் தமிழக அரசு அவர்கள் உயர்கல்வி கற்க ரூ. 30 லட்சம் ஊக்க தொகை வழங்கியது தி.மு.க. ஆட்சியில் தான்.

மத்திய அரசுக்கு ஜி.எஸ்.டி. ஒரு ரூபாய் நாம் தருகிறோம். ஆனால் மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு 26 பைசா தான் திருப்பி தருகிறது.

ஆனால் குஜராத், மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம் மாநிலத்திற்கு அவர்கள் செலுத்திய ஒரு ரூபாயுடன் ரூ 50 பைசா சேர்த்து ஒரு ரூபாய் 50 பைசாவாக மத்திய அரசு தருகிறது. தமிழ்நாடு அரசு கஜா புயலுக்கு 600 கோடி கேட்டது. ஆனால் மத்திய அரசு 100 கோடி நிதி தந்தனர். ஆனால் குஜராத்திற்கு கஜா புயலுக்கு ரூ. 4 ஆயிரம் கோடி கேட்டதற்கு ரூ.3 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மத்திய அரசு தந்துள்ளது. இப்படி ஒரு மாற்றாந்தாய் மனப்பான்மையாக தமிழகத்தை மத்திய அரசு கடைபிடிக்கிறது.

இந்தியாவில் மதத்தால், ஜாதியால், மொழியால் பிளவுபட்டு இருக்கோம், மேலும் உணவால், உடையாலும் நாம் வேறுபட்டு இருக்கிறோம். யாருக்கு ஓட்டு போடும் உரிமை, எம்.எல்.ஏ , எம்.பி யார், பார்லிமெண்டுக்கு என்ன அதிகாரம், சட்டசபைக்கு என்ன அதிகாரம், இவை தவறினால் சுட்டிக்காட்ட ஐகோர்ட் மற்றும் சுப்ரீம் கோர்ட் என இவ்வளவு அதிகாரங்களையும் அரசியல் சட்டம் வழங்கியுள்ளது. இந்தச் சட்டம் இருப்பதால் தான் பெரம்பலூரில் நாம் இத்தனை பேர் ஒன்றாக நிற்கிறோம்.

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே உணவு, ஒரே பழக்க வழக்கம் என்று சொல்லக்கூடிய ஒரு மதவாத ஆட்சி தான் பா.ஜ.க. ஆட்சி, ராஜஸ்தான் என பல இடங்களைப் பிடித்து இப்போது ஆந்திரா வரை வந்துவிட்டது. அமித்ஷாவும், மோடியும், ஆர்.எஸ்.எஸ்ம் தமிழகத்திற்குள் நுழையப் பார்க்கிறார்கள். ஆனால் இங்கே எல்லையில் ஒரு ஆள் கத்தி வைத்துக் கொண்டு நிற்பது போல மறித்து நிற்கிறார் மு.க.ஸ்டாலின்.

நேரடியாக மு.க. ஸ்டாலினை எதிர்க்க முடியாது என்பதால், தமிழகத்தில் அ.தி.மு.க. எடப்பாடி பழனிசாமி மூலமாகத் தான் பாஜ உள்ளே நுழையப் பார்க்கிறது. அதனால் தான் இது அ.தி.மு.கவிற்கும் தி.மு.க.விற்கும் இடையிலான தேர்தல் அல்ல, இது டெல்லிக்கும், தமிழ்நாட்டிற்கும் இடையிலான தேர்தல் என முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் பழனிசாமி 5 லட்சம் கோடி கடன் வைத்து சென்ற சமயத்திலும், சென்னை யில் ஏற்பட்ட மழை வெள்ளம், கொரோனா காலத்தில் நிதியுதவி ஆகியவற்றை வழங்கியுள்ளார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்பாடுகள், கொண்டு வந்த திட்டம் ஆகியவை இந்தியாவிலேயே முதலிடத்தில் உள்ளது.

பெரம்பலூர் நகரில் போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆகையால் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த அடுத்த ஓராண்டு காலத்தில் பெரம்பலூரில் பாலக்கரையிலிருந்து ஆத்தூர் ரோடு வரை பறக்கும் உயர் மட்ட பாலம் அமைக்கப்படும் எனவும், பெரம்பலூர் அரசு மருத்துவமனை எதிர்புறம் உள்ள ஏரிக்கரைக்குள் தூண்போட்டு துறைமங்கலம் ஏரி வரை தேசிய நெடுங்சாலையை இணைக்கும் வகையில் உயர்மட்ட மேம்பாலம் கட்டப்படும் எனவும் தெரிவித்த அவர் மத்தியில் நாம் கூட்டணி அங்கம் வகிக்கும் ஆட்சி வந்ததும் பெரம்பலூரில் ஆயிரம் கோடியில் பல்நோக்கு மருத்துவ ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியின் போது மாவட்ட கழகச் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.ப. பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத்,

ஒன்றிய செயலாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, பேரூர் கழக செயலாளர்கள் செல்வலெட்சுமி சேகர், ஆர்.ரவிச்சந்திரன், பேரூராட்சி தலைவர்கள் பாக்கியலெட்சுமி செங்குட்டுவன் வள்ளியம்மை ரவிச்சந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம். மணிவாசகம் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் தொகுதி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தீவிரப் பிரச்சாரம் செய்கிறார்!

## மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!



பெரம்பலூர், ஏப். 16-

கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெரம்பலூர், குன்னம், அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய 4 தொகுதிகளில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்கிறார்.

இது குறித்து பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி., வழிகாட்டுதல் படி,போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனைக்கினங்க, பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் டாக்டர் S.T.ஜெயலெட்சுமி, குன்னம் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், அரியலூர் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் லதா பாலு, ஜெயங்கொண்டம் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கா.சொ.க. கண்ணன் ஆகியோர்களை ஆதரித்து இன்று (16.4.2026, வியாழக்கிழமை), மாலை 6.00 மணிக்கு, பெரம்பலூர் அரியலூர் சாலையில் உள்ள ஒதியம் பிரிவு சாலையில் கழக தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் செய்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், வார்டு செயலாளர்கள், கிளைக் கழக செயலாளகள், கழகத் தோழர்கள் உள்ளிட்ட அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம், பாலக்கோடு சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அண்ணாமலைஅள்ளி புதூர், அந்தேரிகாடு,எலுமிச்சனஅள்ளி உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் பாலக்கோடு சட்டமன்ற தொகுதி தி.மு.க வேட்பாளர் டாக்டர்.டிஎன்வி. எஸ்.செந்தில்குமார் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துரைத்து உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கேட்டு, தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.உடன் காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்விடி. கோபால்,ஜி.எல்.வெங்கடாசலம் உள்ளிட்ட கழக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.